முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

O.S. No.170/2013

13.06.2019

வா.சா.1 : பெயர் : பாலகுமார்

மேற்படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

முதல் பிரதிவாதிக்கு ரூ.1000 அபராதம் எனது மனைவி செலுத்த வேண்டுமென்று முதல்வர் உத்தரவிட்டிருந்தார். 2010 ல் அபராத தொகை செலுத்தப்பட்டது. அதற்கு ரசீது இல்லை. என் மனைவி விடுப்பு போட்டதால் அபராதம் போடப்பட்டது. என் மனைவி தனிப்பட்ட காரணத்திற்காக விடுப்பு கொடுத்திருந்தார். என் மனைவி விடுப்பு கடிதம் கொடுக்கவில்லை. வாய்மொழியாக சொல்லியிருந்தார். அபராத தொகை செலுத்தும்போது ஆட்சேபணை தெரிவித்தோம். எழுத்துமூலமாக தெரிவிக்கவில்லை. முதல் பிரதிவாதியின் நிர்வாகத்தை 4 ம் பிரதிவாதி பார்த்து வந்தார் என்றால் சரியல்ல. தேனா வங்கியில் முதல் பிரதிவாதி எவ்வளவு கடன் வாங்கியிருந்தார் என்றால் 2006 ல் ரூ.68 லட்சம், 2008 ல் ரூ.3 ½ கோடி, 2011 ல் ரூ.9 ¾ கோடி கடன் வாங்கப்பட்டது. இந்த கடன் விபரங்களை 2 ம் பிரதிவாதி சொல்லி தெரியும். 2006 மற்றும் 2008 ல் வாங்கப்பட்ட கடன் திரும்ப செலுத்தப்பட்டுவிட்டது என்றால் தெரியாது. 2011 ல் வாங்கிய கடனில் எவ்வளவு பாக்கி செலுத்த வேண்டுமென்றால் தெரியாது. எதற்காக கடன் வாங்கப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது. முதல் இரண்டு கடன்கள் தீர்க்கப்பட்டுவிட்டது என்றும், மூன்றாவது கடனில் சுமார் ரூ.2 கோடி பாக்கி உள்ளது என்றால் தெரியாது. இந்த கடன்களுக்கு 2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் அவர்களின் தனிப்பட்ட சொத்துக்களை ஜாமீனாக கொடுத்தார்கள். மேற்சொன்ன கடன்கள் எதற்காக வாங்கப்பட்டது என்றால் ஏற்கனவே கட்டப்பட்ட கட்டிடத்தை கட்டப்போவதாக தெரிவித்து கையாடல் செய்யும் நோக்கில் வாங்கப்பட்டது. மேற்சொன்ன கடன்கள் Term Loan ஆகும். ஒவ்வொரு கடனும் மூன்று தவணைகளில் கொடுக்கப்பட்டது என்றால் தெரியாது. கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளை ஒவ்வொரு

நிலையிலும் வந்து பார்வையிட்டார்கள் என்றால் தெரியாது. கட்டிடம் எப்போது கட்ட ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்பட்டது என்ற விபரம் தெரியும். 2 வது பிரதிவாதி சொன்ன வகையிலும், நான் நேரில் பார்த்த வகையிலும் தெரியும். ஒவ்வொரு கட்டித்தையும் எவ்வளவு செலவு செய்து கட்டினார்கள் என்ற விபரம் தெரியும். எனக்கு நேரடியாக தெரியாது. எனது பெரியப்பா சொன்ன வகையில் தெரியும். அறக்கட்டளை ஆவணத்தில் கட்டுமான பணிகள் செய்யும் பணியை யாரிடம் கொடுப்பது என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கட்டுமானம் செய்வதற்கு அனுமதி பெறப்பட்ட விபரங்கள் எனக்கு நேரில் தெரியாது. பெரியப்பா சொல்லி தெரியும். கட்டிடம் பொறுத்து WP.No.24220/2014 என்ற வழக்கு தாக்கல் செய்த விபரம் தெரியும். அந்த வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது. கட்டிடம் கட்டுவதற்கு பஞ்சாயத்தில் அனுமதி பெறுவது தொடர்பாக அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. பொய்யான தகவலை கொடுத்து அனுமதி பெற்றதாக எந்த அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் Land user சான்றிதழை அவர்களாகவே தயாரித்துக் கொண்டார்கள். அவ்வாறு தயாரித்தது தொடர்பாக அரசு தரப்பில் எதுவும் நடவடிக்கை எடுத்துள்ளதா என்றால் இல்லை. அந்த Land user சான்றிதழை நான் பார்த்துள்ளேன். அசலை பார்த்தேன். 3 ம் பிரதிவாதி காட்டினார். எப்போது காட்டினார் என்றால் ஞாபகமில்லை. நான் அதுபோன்ற சான்றிதழை பார்க்கவில்லை என்றும், வழக்கிற்காக தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. கல்லூரியில் Teaching மற்றும் Non teaching அலுவலர்களுக்கு மஸ்டர் ரோல் உள்ளது. அதை நான் பார்த்துள்ளேன். நான் எந்த அடிப்படையில் பார்த்தேன் என்றால் ஞானசேகரன் எங்களது கட்டிடத்தில் வந்து கையெழுத்து வாங்கி சென்றார். கடை, காம்ப்ளக்ஸ், வீடு உள்ளது. எங்களது கட்டிடத்தில் உள்ள அறையில் பேசிக்கொண்டிருப்போம். அங்கு வந்து கையெழுத்து வாங்கினார். மஸ்டர் ரோல் என்பது கல்லூரிக்குள் தான் இருக்கும் என்றும், வெளியில் கொண்டுவர வாய்ப்பில்லை என்றும் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி நடத்தும் அனைத்து கல்லூரிகளும் ஒரே வளாகத்தில்

உள்ளது. தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் அந்த கல்லூரிக்கு வருவதில்லை என்றால் தெரியாது. அனைத்து தனியார் கல்லூரிகளிலும் UGC சம்பளம் போடுகிறார்களா என்றால் தெரியாது. எந்த அடிப்படையில் UGC சம்பளம் போடவில்லை என்று சொல்கிறேன் என்றால் நேரு மெமோரியல் கல்லூரியில் அவ்வாறு போட்டுள்ளதால் சொல்லியுள்ளேன். UGC சம்பளம் கொடுக்காததால் முதல் பிரதிவாதிக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்றால் தெரியாது. அரசாங்கம் மாணவர்களுக்கு கொடுக்கும் சலுகைகளை இந்த கல்லூரியில் கொடுக்கவில்லை என்று எந்த அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் Stipend கொடுப்பதில்லை. இது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு புகார் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதுபோன்ற புகார் கொடுக்கப்பட்டு 2014 ல் இணை இயக்குனர் விசாரித்து புகார் உண்மையில்லை என்று நிராகரித்து விட்டார் என்றால் தெரியாது. தாட்கோ என்பது படித்து வேலையில்லாத மாணவர்களுக்கு பயிற்சி கொடுத்து வேலைக்கு ஏற்பாடு செய்வதாகும். தாட்கோ நிறுவனத்திலிருந்து முதல் பிரதிவாதிக்கு தொகை வந்தது. தாட்கோ நிபந்தனைகளை முதல் பிரதிவாதி கடைபிடிக்கவில்லை. கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த மாணவர்களையே கணக்கு காட்டி தாட்கோ திட்டத்தில் பணம் பெற்றுள்ளார்கள். ரூ.45 லட்சம் பெற்றுள்ளார்கள். 2006-2007 மற்றும் 2007-2008 வருடங்களில் அந்த தொகை பெறப்பட்டுள்ளது. எனக்கு இதுபற்றி 2008 ல் தெரிய வந்தது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. என் பெரியப்பாவிடம் சொன்னேன். என் பெரியப்பாவும் சேர்ந்து தான் கையாடல் செய்தார். அவ்வாறு செய்ய வேண்டாம் என சொன்னேன். அது சம்பந்தமாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. பொதுமக்கள் கொடுத்துள்ளார்கள். இது சம்பந்தமாக விஜிலன்ஸ் விசாரணை நடந்தது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.